# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section ~~154 Cr.P.C.~~ 173 BNSS)

(கு.ந.வி.தொ.பிரிவு ~~154 இன் கீழ்~~) 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044349

1. District மாவட்டம் : Krishnagiri PS காவல்நிலையம் : V & AC Year ஆண்டு : 2024 FIR No. மு.த.அ. எண் : 03/AC/2024 Date நாள் : 20.07.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 19.07.2024 Prior to 21.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time நேரம் : 19.07.2024 at 22.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Through Sources

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் O/o the Sub-Registrar, Denkanikottai, Krishnagiri District about 65 Km South-west
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Vadivel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Raman
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42/2024 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Deputy Superintendent of Police (g) Address : முகவரி O/o the Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Krishnagiri District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. V. Saigeetha, age 58 w/o Kalaivanan, Sub-Registrar, O/o the Sub-Registrar, Denkanikottai, Krishnagiri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

SUO-MOTU

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 2024

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.07.2024 at 07.00 hrs

Name: பெயர் R. Vadivel
Rank: நிலை Deputy Superintendent of Police No. எண்
V&AC,
Krishnagiri.

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2024 U/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வ.எண்.12-ன் தொடர்ச்சி.**

19.07.2024 ஆம் தேதி இரவு 19.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணிபுரிந்துவரும் திருமதி.V.சாய்கீதா அவர்கள் பத்திர பதிவு செய்ய வரும் பொதுமக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மூலமும், இடைதரகர்கள் மூலமும் கையூட்டு பணம் பெற்றும், அந்த பணத்தை அவருக்குச் சொந்தமான TN 29 BQ 2346 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Hyundai Creta காரில் எடுத்துக்கொண்டு, கெலமங்கலம் வழியாக தருமபுரிக்கு இரவு சுமார் 09.00 மணிக்கு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு செல்லயிருப்பதாக இன்று இரவு சுமார்19.00 மணிக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு இன்று 19.07.2024 ஆம் தேதி இரவு சுமார் 19.30 மணியளவில் நான் காவலர் குழுவினருடன் அரசுக்கு சொந்தமான TN 22G 7777 என்ற வாகனத்தில் புறப்பட்டு, இரவு சுமார் 20.00 மணியளவில் சூளகிரி - உத்தனப்பள்ளி பிரிவு சாலை அருகே வரப்பெற்றது. ஏற்கனவே தகவல் தெரிவித்ததின் பேரில், அரசு சாட்சிகளான திரு.I.ஆனந்த், மண்டல துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திருமதி.V.ராதா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்ட வழங்கல் பிரிவு, வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் சூளகிரி - உத்தனப்பள்ளி பிரிவு சாலை அருகே வந்திருந்தனர். அவர்களிடம் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் விவரத்தினை விளக்கமாக எடுத்துச் சொல்லி, அரசு சாட்சிகளுடன் இரவு 20.45 மணிக்கு கெலமங்கலம் - தேன்கனிக்கோட்டை செல்லும் சாலையில் உள்ள தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, கெலமங்கலம் கிளைக்கு அருகே வரப்பட்டது. அப்போது இரவு சுமார் 21.20 மணிக்கு தேன்கனிக்கோட்டையிலிருந்து கெலமங்கலம் நோக்கி வரப்பெற்ற TN 29 BQ 2346 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற Hyundai Creta காரினை நிறுத்தி சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் வாகனத்தின் இடது முன்புற இருக்கையில் அமர்ந்திருந்த பெண்மணியை பற்றி விசாரிக்க, அவர்

தனது பெயர் திருமதி.V.சாய்கீதா என்றும், தான் நாமக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக (வழிகாட்டி) பணிபுரிந்துவருவதாகவும், தற்போது தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பகராண்மை முறையில் சார் பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், நானும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர்கள் குழுவினரும் அவரவர் தம் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்துகொண்டோம். பின்னர், சார் பதிவாளர் திருமதி.V.சாய்கீதா அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தான் வைத்திருந்த கைபையில் இருந்து ரூ.1,640/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிறக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தில் இருந்த நபர்களை கீழே இறக்கிவிட்டு, அரசு சாட்சிகளின் முன்னிலையில் வாகனமானது சோதனை செய்யப்பட்டது. மேற்படி வாகனத்தில் சார் பதிவாளர் திருமதி.V.சாய்கீதா அமர்ந்திருந்த இடது பக்க முன்புற இருக்கையினை சோதனை செய்தபோது, மேற்படி இருக்கையின் கீழ் பகுதியில் மஞ்சள் நிற பாலித்தீன் கவர் ஒன்று இருந்தது. அந்த கவரை சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்தபோது அந்த கவரினுள் 500 ரூபாய் நோட்டுகள் கட்டு கட்டாக இருந்தன. மேற்படி பணத்தை பற்றி சார்பதிவாளர் திருமதி.V.சாய்கீதா அவர்களிடம் கேட்க, அது தனது சொந்த பணம் என்றும், மேற்படி பணத்தினை தனது ஓட்டுனர் திரு.அக்மலிடம் கொடுத்து காரில் வைக்க சொன்னதாகவும் தெரிவித்தார். திருமதி.V.சாய்கீதா கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், முன்னுக்கு பின் முரணான பதில் கூறியதாலும், இப்பணம் சார் பதிவாளர் அவர்கள் அவரது அரசு பணியினை மேற்கொள்ள கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் உள்ளதாலும், மேற்படி திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இடமானது பிரதான போக்குவரத்து சாலை என்பதாலும், செயல்முறை நடவடிக்கைகளை தொடரமுடியாத நிலை இருந்ததாலும், மேல் விசாரணைக்காக அந்த பணத்தையும், சார் பதிவாளர் திருமதி.V.சாய்கீதா மற்றும் அவருடன் வந்த நபர்களையும் வாகனத்துடன் இரவு 21.45 மணிக்கு புறப்பட்டு இரவு 22.30 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்னர் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் வைத்து அரசு சாட்சிகளின்

உதவியுடன் காரிலிருந்த பணத்தை எண்ணிப்பார்க்கையில், அதில் 500 ரூபாய் தாள்கள் 100 எண்ணிக்கை கொண்ட 12 கட்டுக்களும், 500 ரூபாய் தாள்கள் 71 எண்ணிக்கையில் ஒரு கட்டும், மொத்தம் 13 பணக்கட்டுக்கள் இருந்தன. அதிலிருந்த மொத்த தொகை ரூ.6,35,500/-(1271X500=6,35,500/-) ஆகும். மேற்படி பணத்தை பற்றி சார்பதிவாளர் திருமதி.V.சாய்கீதா அவர்களிடம் கேட்க, தனது மருமகன் திரு.ஆறுமுகம் அவர்கள் சொந்த தொழில் தொடங்குவதற்காக தன்னிடம் ரூ.6,00,000/- கேட்டதாகவும், அதற்காக தான் தேன்கனிக்கோட்டையை சேர்ந்த ரியல்எஸ்டேட் செய்யும் நபரான திரு.வெங்கடாஜலபதி செட்டி என்பவரிடம் ரூ.4,00,000/- கடனாகவும், பத்திரபதிவு எழுத்தர் திரு.மஞ்சுநாத் என்பவரிடம் ரூ.2,00,000/- கடனாகவும் பெற்ற பணம் என்றும், மேற்படி பணத்தினை தனது ஓட்டுனர் திரு.அக்மலிடம் கொடுத்து காரில் வைக்க சொன்னதாகவும் தெரிவித்தார். திருமதி.V.சாய்கீதா கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், இப்பணம் சார் பதிவாளர் அவர்கள் அவரது அரசு பணியினை மேற்கொள்ள கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகம் உள்ளதாலும், மேற்படி பணத்தை மஞ்சல் நிற பாலித்தின் கவருடன் அரசு சாட்சிகளின் முன்னிலையில் அப்போது தயார்செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தில் ஓட்டுனர் இருக்கையில் இருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் B.அக்மல் என்றும், தான் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் TCS நிறுவனத்தின் மூலம் ஒப்பந்தமுறையில் Data Entry Operator-ஆக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது சட்டையின் இடது மேல்புற பாக்கெட்டில் இருந்து ரூ.200/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், மேற்படி வாகனத்தின் பின் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.M.தென்றல் என்பவரை விசாரிக்க, அவர் தான் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனது சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், சோலைக்கோட்டாய் என்ற கிராமம் என்பதாலும், சார் பதிவாளர் திருமதி.சாய்கீதா அவர்களும் தருமபுரியைச் சேர்ந்தவர் என்பதால், அவர் ஊருக்கு செல்லும்போது அவருடன் வாகனத்தில் ஊருக்கு

செல்வது வழக்கம் என்று தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று. கேட்க, அவர் தனது சட்டையின் இடது மேல்புற பாக்கெட்டில் இருந்து ரூ.2,610/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்க்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்பு பின்புற இருக்கையில் அமர்ந்திருந்த மற்றொரு நபரான திரு.M.திருப்பதி என்பவரை விசாரிக்க, அவர் தான் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பைண்டர் வேலை செய்து வருவதாகவும், தனது சொந்த ஊர் தருமபுரி மாவட்டம், பெத்தனூர் என்ற கிராமம் என்பதாலும், சார் பதிவாளர் திருமதி.சாய்கீதா அவர்களும் தருமபுரி என்பதால், அவர் ஊருக்கு செல்லும்போது அவருடன் வாகனத்தில் ஊருக்கு செல்வது வழக்கம் என்று தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது சட்டையின் இடது மேல்புற பாக்கெட்டில் இருந்து ரூ.2,140/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்க்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் பின்புற இருக்கையில் இருந்த மூன்றாவது நபரான திரு.V.இராஜசேகர் என்பவரை விசாரிக்க, அவர் தான் தேன்கனிக்கோட்டை சார் பதிவாளராக பணிபுரிந்து வரும் திருமதி.சாய்கீதா என்பவரின் உடன்பிறந்த அண்ணன் என்றும், தான் சேலம் மாவட்டத்தில், மாவட்ட பதிவாளராக (தணிக்கை) பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், சார் பதிவாளர் திருமதி.சாய்கீதா அவர்களுக்கு நீதிமன்ற டிகிரி பணியில் வரும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இன்று தேன்கனிக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாகவும், திருமதி.சாய்கீதா அவர்கள் ஊருக்கு செல்லும்போது தன்னை கிருஷ்ணகிரியில் இறக்கிவிட்டுவிடுவதாக கூறியதன்பேரில் தான் மேற்படி காரில் வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் தனது பேன்டின் வலதுபக்க முன்புற பாக்கெட்டில் இருந்து ரூ.740/- எடுத்து ஆஜர் செய்து, தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவரின் விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இது சம்மந்தமாக 19.07.2024 ஆம் தேதியன்று இரவு 22.45 மணி முதல் 20.07.2024 ஆம் தேதி அதிகாலை 00.45 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை சார் பதிவாளர்

திருமதி. V.சாய்கீதா அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு பொது ஊழியரான சார் பதிவாளர் திருமதி. V.சாய்கீதா என்பவர் ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெற்றுக்கொண்ட குற்றத்திற்காக இன்று 20.07.2024-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 3/AC/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 -ன்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

20/07/2024

காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு
பிரிவு,
கிருஷ்ணகிரி - மாவட்டம்.